KALAM -International Research Journal
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
Volume X Issue 1, 2016

# மட்டக்களப்பு மாவட்டத்தின் நெல் உற்பத்தி போக்கு

**P. Vinoth**
Department of Geography
Faculty of Arts and Culture
Eastern University
Sri Lanka

## Abstract

Rice is the main food of the people and it occupies the largest part of land in Sri Lanka. Paddy is cultivated in nearly all parts of the country, except at very high altitudes. In which Ampara, Polonnaruwa, Kurunegala, Anuradhapura, Hambantota and Batticaloa districts highly contribute to Sri Lankan economy. The economy of Batticaloa district depends mostly on agriculture and fishing for livelihood. In Batticaloa, distribution of total population by the settlement is around urban 407,974 and rural 586,601. Approximately 69 percentage of the population lives in rural areas and the paddy sector offers employment opportunities for rural laborers in Batticaloa districts. Increasing the local production of paddy is the key objective of every government. Hence, Sri Lankan government also has been supporting paddy sector to increase paddy yield since its independence. in this context the study aims to analyze the trend of paddy production in Batticaloa district. For this purpose, secondary data were collected from divisional secretariat Batticaloa district, Department of Agriculture Land Central bank annual report. The result of the study showed that the data for Batticaloa district does not explain a clear trend during the period of 1994/1995-2013/2014.It reveals that in Batticaloa district, Paddy cultivation has been experiencing fluctuation trend continuously.
Key words: Paddy production, trend, Batticaloa district

## அறிமுகம்

உலகளாவிய ரீதியில் விவசாயத் துறை மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வது மாத்திரமல்லாது பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல், வறுமையை குறைத்தல் என்பவற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாக காணப்படுகிறது (அமிர்தலிங்கம், 2008). இலங்கையின் பொருளாதாரம் உணவு உற்பத்தி விவசாயத்துடன் தொடர்புடையதாகும். இலங்கை வளர்ச்சியடைந்து வரும் நாடாக காணப்படுவதுடன் விவசாய நாடாகவும் காணப்படுவதோடு பெரும்பாலான மக்கள் விவசாயத் துறையிலேயே தங்கியிருக்கின்றனர். இலங்கையில் நெல் உற்பத்தி உள்ளிட்ட விவசாயத் துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேலை வாய்ப்பினை வழங்குதல், அரச வருமானத்தினை உழைத்தல், அன்னியச் செலாவணியை சம்பாதித்தல் போன்றவற்றின் மூலம் நாட்டின் பொருளாதார வளர்சசிக்கு பங்களிப்புச் செய்கிறது. இலங்கையில் வாழும் பெரும்பாலான மக்களின் பிரதான உணவு நெல்லரிசிச் சோறாகும். இலங்கையில் நெற்செய்கை கி.மு 6 ஆம் நூற்றாண்டளவில் ஆரிய இனத்தவர் வந்த காலம் தொட்டே இந்நாட்டில் முதன்மை பெற்று வருகின்றது. இலங்கையில் நெற்செய்கையானது 02 போகங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. பெரும்போகம் (ஒக்டோபர் - மார்ச்) சிறுபோகம் (ஏப்ரல் - செப்ரெம்பர்) காலப்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கையில் பிரதானமாக அனைத்து மாவட்டங்களிலும்

நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றுள் குருணாகல் மாவட்டத்திலே தான் மிகக் கூடுதலான பரப்பில் நெல் செய்கை பண்ணப்படுகின்றது. நுவரெலியா மாவட்டத்திலேயே குறைந்தளவில் நெல் செய்கை பண்ணப்படுகின்றது.

தாழ்நாட்டு உலர்வலயத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, பொலன்னறுவை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், அம்பாறை, வவுனியா, அம்பாந்தோட்டை, குருணாகல் ஆகிய மாவட்டங்களில் பயிரிடப்படுகின்றது. இங்கு பெரும்போகத்தின் போதே பெரும்பாலும் நெல் பயிரிடப்படுகின்றதுநாடு முழுவதும் 708 000 ஹெக்டேயர் நிலப்பகுதியில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கையில் குருணாகல், அம்பாறை, பொலன்னறுவை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெற்செய்கையானது 61, 321 ஹெக்டேயர் பரப்பில் பெரும்போகம், சிறுபோகம் என இரண்டு போகங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றதுசெய்கை பண்ணப்படுகின்றது. (District Secretariat, Batticaloa 2015). மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாழ்வாதார தொழிலாக நெற்பயிர்ச் செய்கை காணப்படுவதோடு மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல், உணவுத் தேவையினை பூர்த்தி செய்தல், வருமானத்தினை உழைத்தல் என்பவற்றிலும் நெற்பயிர்ச்செய்கையானது பிரதான பங்கு வகிக்கின்றது. இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நெற்செய்கை உற்பத்தி போக்கு பற்றி ஆராய்வதாக இவ் ஆய்வு அமைகின்றது.

## ஆய்வின் நோக்கம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் நெல்லுற்பத்தியின் போக்கினை பகுப்பாய்வு செய்தல்.

## முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு

Sulakshika,Manawadu, (2008). **"Rainfall Fluctuation and Changing Patterns of Agriculture Practices"** என்ற ஆய்வானது மழைவீழ்ச்சித் தளம்பல் மற்றும் மாற்றமடைந்து வரும் விவசாய நடவடிக்கைகள் பற்றி ஆராய்கின்றது. இவ்வாய்விற்கு 1961 – 2002 இற்கு இடைப்பட்ட மொத்த மழைவீழ்ச்சி மற்றும் மழைநாட்களின் எண்ணிக்கை பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் 1983 – 2008 வரையான மகாவலி அதிகார சபைக்கு உட்பட்ட பயிர்களின் தரவுகள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. 22 மழைவீழ்ச்சி நிலையங்களில் ஈர மற்றும் இடைவலயங்களிலுள்ள நிலையங்களில் மழைவீழ்ச்சி குறைவடைந்து செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு பொத்துவில் ஆகியன அதிகரித்த போக்கை காட்டின. மழைநாட்களின் எண்ணிக்கை நுவரெலியாவில் மட்டும் அதிகரித்த போக்கைக் காட்டியது. ஏனைய அனைத்து நிலையங்களிலும் குறைவடைந்து செல்லும் போக்கைக் காட்டியது. விவசாய நாட்காட்டியின் அவதானிப்பில் பெரும்போகம், சிறுபோகம் என்பன காலம் தாழ்த்தி ஆரம்பிக்கப்பட்டதையும் குறிப்பிடலாம். மேலும் நீர்ப்பாசனம் வழங்கப்பட்ட அளவும் வழங்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கையும் குறைவாகவே காணப்பட்டது

ரஞ்சித் மாபா, (1999). நெற் சாகுபடித் துறையில் ஏற்படும் சவால்களுக்கும் மாற்றங்களுக்கும் முகங்கொடுத்து அடுத்துவரும் தசாப்தங்களில் வெற்றிகரமாக அமைய வேண்டுமானால் நிலப்பாவனையில் விரிவாக்கலை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை (2011),மொத்த நெல்லுற்பத்தி 2010 இனை விட 3.87 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 10% வீழ்ச்சியடைந்தமைக்கு 2011 இன் சிறுபோகம் கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்டவற்றில் மிக உயர்ந்த உற்பத்தியை பதிவு செய்த போதும் 2010/2011 பெரும்போக நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். பெரும்போக நெல்

உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு எந்தவொரு பருவகாலப் பகுதியிலும் அறிவிக்கப்பட்ட பயிர்ச் செய்கை சேதங்களுள் மிக உயர்ந்ததாகக் கருதப்படுகின்ற 2011 ஜனவரி, பெப்ரவரியில் ஏற்பட்ட வெள்ளத்தின் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்கள் காரணமாக இருந்தன. வழமையான மிகையான நெல்லுற்பத்தி மாவட்டங்களாக கருதப்படும் மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, அம்பாறை, வவுனியா, பொலன்னறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதனால் நெல் உற்பத்தி பாரியளவில் பாதிப்படைந்தது

## தரவுகளும், ஆய்வுமுறையியலும்

**முதலாம் நிலைத் தரவுகள்**: கலந்துரையாடல்,ஒளிப்படங்கள் போன்ற தரவு சேகரிப்பு முறைகளின் மூலம் சேகரிக்கப்பட்டன.

**இரண்டாம் நிலைத் தரவுகள்:**இலங்கை புள்ளிவிபரத்திணைக்களம், மட்டக்களப்பு மாவட்ட செயலக புள்ளிவிபர கையேடுகள், மத்திய வங்கி ஆண்டறிக்கை, விவசாய திணைக்களம், கமநலவேவைகள் திணைக்களம் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகள், சஞ்சிகைகள், நூல்கள், மற்றும் இணையத்தளங்கள் மூலமாகவும் தகவல்கள் பெறப்பட்டன.

## தரவுப் பகுப்பாய்வு

ஆய்விற்காக பெறப்பட்ட தகவல்கள், தரவுகளை ஆய்வில் இலகுபடுத்திக் காட்டுவதற்கு நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. பெறப்பட்ட தரவுகளைக்கொண்டு Excel 2010 மென்பொருளைப் பயன்படுத்தி அட்டவணைகள், வரைபடங்கள், விளக்கப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தின் நெல்லுற்பத்தியின் போக்கினை பகுப்பாய்வு செய்வதற்காக1994/1995-2013/2014 தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விபரணரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

## தரவுப் பகுப்பாய்வும், முடிவுகளும்

### பெரும்போக நெல்லுற்பத்திப் போக்கு

பெரும்போக நெல்லுற்பத்தி என்பது மழையை நம்பி மேற்கொள்ளப்படும் நெற்செய்கையாகும். நாட்டின் மொத்த நெல்லுற்பத்தியில் பெரும்பகுதி பெரும்போகத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்போக நெல்லுற்பத்தியின் போக்கு பின்வருமாறு காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போகத்தில் கூடியளவு நெல்லுற்பத்தியாக 2011 / 2012 ஆம் ஆண்டு 213,832 மெற்றிக் தொன் விளைச்சல் கிடைக்கப்பெற்றுள்ளது. இக்காலப்பகுதியில் 1786.6 mm மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது அதேவேளை யுத்தம் முடிவடைந்த பின்னர் பயிரிடப்படாதிருந்த நிலப்பரப்புக்களும் நெற்செய்கையில் ஈடுபடுத்தப்பட்டமையும் காரணமாகும். குறைந்தளவான நெல்லுற்பத்தி 2010/ 2011 ஆம் ஆண்டு காலத்தில் 18403 மெற்றிக் தொன்னாகப் பதிவாகியுள்ளது. இக் காலத்தில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கு இதற்கு காரணமாக அமைந்தது.இதனை வரைபடம் 1 இல் அவதானிக்கலாம்.

மூன்று வருட நகரும் சராசரியை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது 2012 / 2013 ஆம் ஆண்டில் 161 801 மெற்றிக் தொன் நெல் பெரும்போகத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது அதிகளவு உற்பத்தியாகக் காணப்படுகின்றது. 1995 / 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறைந்தளவான உற்பத்தியாக 42 100 மெற்றிக் தொன் உற்பத்தி பெறப்பட்டுள்ளது. பெரும்போக நெல்லுற்பத்திப் போக்கானது படிப்படியான வளர்ச்சியை 1995/ 1996– 2004 / 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காட்டுவதுடன் 2005/ 2006 - 2007 / 2008 ஆகிய வருடங்களில் வீழ்ச்சிப்போக்கைக் காட்டி நிற்கின்றது. 2007 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புக் காரணங்கள் காரணமாக விவசாயிகள் இடம்பெயர்ந்தமை, 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் - டிசெம்பர் வரை நிலவிய பலத்த

மழை மற்றும் வெள்ளம் என்பன போன்ற காரணங்களினால் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. 2008/ 2009 மீண்டும் அதிகரிப்பை காட்டி நிற்கின்றது.2009 / 2010 காலப்பகுதியில் வீழ்ச்சி நிலையினையும்,2010 / 2011 இல் அதிகரித்த போக்கையும் காட்டுகின்றது. 2011 / 2012அதிகரிப்பை வீழ்ச்சியையும், 2012 / 2013 மீண்டும் அதிகரிப்பையும் காட்டுகின்றது. இதனை வரைபடம் 2 இல் அவதானிக்கலாம்.

பெரும்போகத்தில் ஒரு ஹெக்டேயருக்கான விளைச்சலை நோக்கும் போது கூடுதலான விளைச்சல் 2011 / 2012 காலப்பகுதியிலேயே பெறப்பட்டுள்ளது. இதற்கு போதியளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றமை ஒரு காரணமாகும். இக்காலத்தில் ஒரு ஹெக்டேயருக்கு 3855kg விளைச்சல் கிடைக்கப் பெற்ற அதேவேளை குறைந்தளவான விளைச்சல் 1996/ 1997 ஆம் ஆண்டு 1924kg ஆகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. விளைச்சல் குறைவடைவதற்குஇக்காலப்பகுதியில் குறைவான மழைவீழ்ச்சியினால் நெற் பயிர் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பொதுவாக நோக்கும் போது ஹெக்டேயருக்கான விளைச்சலில் 1994/1995–1996/1997 காலப்பகுதியில் குறைவான நிலையிலும். 2008/ 2009பின்னர் அதிகரிப்பைக் காட்டியுள்ளது. இதனை வரைபடம் 3 இல் அவதானிக்கலாம்.

பெரும்போகத்தில் நெல் விதைக்கப்பட்ட பரப்பையும், அறுவடை செய்யப்பட்ட பரப்பையும் ஒப்பிட்டு நோக்கும் போது சில காலப்பகுதியில் சாதகமான போக்கையும், சில காலப்பகுதியில் பாதகமான போக்கையும் காட்டுகின்றது. இந்தவகையில் 1995 / 1996 – 2005/ 2006 வரையான காலப்பகுதியில் விதைக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவு படிப்படியாக அதிகரித்துக் காணப்படுகின்றது. 2006/2007–2008/2009 வரையான காலப்பகுதியில் குறைவடைந்தும் காணப்படுகின்றது. இதற்கு இக் காலப்பகுதியில் இடம்பெற்ற யுத்தம் பிரதான காரணமாக அமைந்தது. கிடைக்கப்பெறும் நீரிலிருந்து ஆகக் கூடிய நன்மை பெறுவதற்காக விவசாயிகள் நெல் உற்பத்தி செய்யப்படும் நிலங்களில் பெரிய வெங்காயம், சிறிய வெங்காயம், காய்கறிகள் போன்ற ஏனைய களப் பயிர்களைப் பயிரிட்டமை,2008.∴ 2009 இருந்து அதிகரித்த போக்கையே காட்டி நிற்கின்றது. 2012/ 2013 காலப்பகுதியில் அதிகளவு விதைக்கப்பட்ட பரப்பாக 66276 ஹெக்டேயர் பதிவாகியுள்ள அதேவேளை மிகக் குறைந்த பரப்பு நெல் விதைக்கப்பட்ட காலப்பகுதியாக 2006 / 2007 ஆம் ஆண்டு காணப்படுகின்றது. இக் காலப்பகுதியில் 18469 ஹெக்டேயர் பரப்பில் நெல் விதைக்கப்பட்டது. அதிகளவு நெல் அறுவடை செய்யப்பட்ட காலப்பகுதியாக 2012 ∴ 2013 ஆம் ஆண்டு காணப்படுகின்றது. இவ்வாண்டில் 62747 ஹெக்டேயர் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. இதற்கு கிழக்கு மாகாணத்தில் 2006/2007 இடம்பெற்ற யுத்தத்தின் விளைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில்விவசாயம் மேற்கொள்ளப்படாதிருந்த விவசாய நிலங்களிலும் பெரும்போகத்தில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க காரணமாகக் காணப்படுகின்றது. அதேவேளை மிகக் குறைவான நெல் அறுவடை செய்யப்பட்ட காலமாக 2006 / 2007 ஆம் ஆண்டு 14685 ஹெக்டேயர் பரப்பு காணப்படுகின்றது.இதனை வரைபடம் 4 இல் அவதானிக்கலாம்.

## சிறுபோக நெல்லுற்பத்திப் போக்கு

சிறுபோக நெல்லுற்பத்தியானது பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், மற்றும் மழையை நம்பி மேற்கொள்ளப்படுகின்றது.
பெரும்போகத்துடன் ஒப்பிடும் போது இப்பருவத்தில் பெறப்படும் விளைச்சல் குறைவாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சிறுபோக நெல்லுற்பத்திப் போக்கை பின்வருமாறு நோக்க முடியும். சிறுபோகத்தில் கூடியளவு நெல்லுற்பத்தி 2013 ஆம் ஆண்டு பெறப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 96780 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. அதேநேரம் குறைந்தளவு நெல்லுற்பத்தியாக 15817 மெற்றிக் தொன் 1997 ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது. இதனை வரைபடம் 5 இல் அவதானிக்கலாம்.

மூன்று வருட நகரும் சராசரியை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது 2012 ஆம் ஆண்டு அதிகளவு நெல் உற்பத்தியாக 91127 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. 2011 ஆம் ஆண்டு உற்பத்தி அதிகரிப்பதற்கு சாதகமான வானிலை நிலவியமை, போதுமான நீர் சரியான நேரத்தில் வழங்கப்பட்டமை என்பன காரணமாக அமைகின்றன. குறைந்தளவு நெல்லுற்பத்தி 1997 ஆம் ஆண்டு பெறப்பட்டது. இவ்வாண்டு 25632 மெற்றிக் தொன் கிடைக்கப்பெற்றது. சிறுபோக நெல்லுற்பத்திப் போக்கானது 1997 – 2000 ஆம் ஆண்டு வரை அதிகரித்த போக்கைக் காட்டிய அதேவேளை 2001 ஆம் ஆண்டுகளில் வீழ்ச்சிப் போக்கையும் காட்டி நிற்கின்றது. இதற்கு எல்லை நிலங்களில் பயிர்ச்செய்கை நெல் பயிரிடும் நிலத்தில் வேறு பயிர்கள் பயிரிடப்பட்டமை காரணங்களாகும். மீண்டும் 2002-2004 ஆகிய வருடங்களில் அதிகரிப்பை காட்டிய போதும் 2005, 2006 ஆம் ஆண்டு உற்பத்தி வீழ்ச்சியடைந்த நிலையிலேயே காணப்பட்டது. இக் காலப் பகுதியில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக விவசாயிகள் இடம்பெயர்ந்தமையால் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. எனினும் 2007 I அடுத்த காலப்பகுதியிலிருந்து அதிகரித்த போக்கையே காட்டி நிற்கின்றது. இதற்கு சிறந்த வானிலை நிலவியமை, பயிரிடப்பட்ட காணிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவும் உற்பத்தி அதிகரிப்பிற்கு காரணமாகும். இதனை வரைபடம் 6 இல் அவதானிக்கலாம்.

சிறுபோகத்தில் ஒரு ஹெக்டேயருக்கான விளைச்சலை நோக்கும் போது 2014 ஆம் ஆண்டு அதிகூடிய விளைச்சலாக 4919மg கிடைக்கப் பெற்றுள்ள அதேவேளை 2001 ஆம் ஆண்டு மிகக் குறைந்த விளைச்சலாக 3036kg பதிவாகியுள்ளது. 2013 ஆம் ஆண்டு கூடிய விளைச்சல் பெறப்பட போதியளவு நீர்ப்பாசன வசதி கிடைக்கப்பெற்றமை காரணமாகக் காணப்படலாம். நீர்ப்பாசன வசதிகள் சரியாகக் கிடைக்கப் பெறாமைக்கு குளங்களில் நீர்ப்பற்றாக்குறை, நீர்ப்பாசனக் கால்வாய்கள் சீராகக் காணப்படாமையும் காரணமாக அமைந்தது. பொதுவாக நோக்கும் போது ஹெக்டேயருக்கான விளைச்சல் ஒரு தளம்பல் போக்கையே காட்டி நிற்கின்றது. இதனை வரைபடம் 7 இல் அவதானிக்கலாம்.

சிறுபோகத்தில் நெல் விதைக்கப்பட்ட பரப்பையும் அறுவடை செய்யப்பட்ட பரப்பையும் நோக்கும் போது பெரும்பாலான வருடங்களில் சாதகமான நிலைமையே காணப்படுகின்றது. அதாவது விதைக்கப்பட்ட பரபப்பிற்கும் அறுவடைசெய்யப்பட்ட பரப்பிற்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படவில்லை. 1995 இல் அதிகமாகவும். 1996-1997 காலப்பகுதியில் வீழ்ச்சி நிலையினையும் பின்னர் 1998-2003 வரையான காலப்பகுதியில் விதைக்கப்பட்ட பரப்பு அதிகரித்து காணப்பட்ட அதேவேளை 2004-2007 வரையான காலப்பகுதியில் சற்று வீழ்ச்சிப் போக்கைக் காட்டியது. 2008-2014 வரையான காலப்பகுதியல் அதிகரிப்பையும் காட்டுகின்றது. அதிகளவு நெல் சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட காலமாக 2013 ஆம் ஆண்டு காணப்படுகின்றது. இவ்வாண்டு 27556 ஹெக்டேயர் பரப்பு சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்டது. குறைந்தளவான பரப்பு 2007 ஆம் ஆண்டு அறுவடை செய்யப்பட்டது. இவ்வாண்டில் 2141 ஹெக்டேயர் பரப்பு நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு விதைக்கப்பட்ட பரப்பும், அறுவடை செய்யப்பட்ட பரப்பும் வீழ்ச்சியடைந்தமைக்கு கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற யுத்தம் பிரதான காரணமாகும்.இதனை வரைபடம் 5.8 இல் அவதானிக்கலாம்.

## முடிவுரை

மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாழ்வாதார தொழிலாக நெற்பயிர்ச் செய்கை காணப்படுவதோடு மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல், உணவுத் தேவையினை பூர்த்தி செய்தல், வருமானத்தினை உழைத்தல் என்பவற்றிலும் நெற்பயிர்ச்செய்கையானது பிரதான பங்கு வகிக்கின்றது. இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நெற்செய்கை உற்பத்தி போக்கு பற்றி ஆராய்வதாக இலங்கை புள்ளிவிபரத்திணைக்களம், மட்டக்களப்பு மாவட்ட செயலக புள்ளிவிபர கையேடுகள், மத்திய வங்கி ஆண்டறிக்கை, விவசாய திணைக்களம், கமநலவேவைகள் திணைக்களம் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட இரண்டாம் நிலைத்தரவுகளைப் பயன்படுத்தி 1994/1995-2013/2014 வரையான காலப்பகுதியில் நெற்செய்கை உற்பத்தி போக்கு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

இவ் ஆய்வின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நெற்செய்கை உற்பத்திப் போக்கு தொடர்ந்தேர்ச்சியாக அதிகரிப்பினை காட்டவில்லை. மாறாக ஏற்ற இறக்கங்களுடன் கூடிய தளம்பல் நிலையுடனான நெற் உற்பத்திப் போக்கினையே காட்டுகின்றது. பெரும்போகத்தில் கூடியளவு நெல்லுற்பத்தியாக 2011 / 2012 ஆம் ஆண்டு 213,832 மெற்றிக் தொன் விளைச்சல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறைந்தளவான நெல்லுற்பத்தி 2010/ 2011 ஆம் ஆண்டு காலத்தில் 18403 மெற்றிக் தொன்னாகப் பதிவாகியுள்ளது. சிறுபோகத்தில் கூடியளவு நெல்லுற்பத்தி 2013 ஆம் ஆண்டு பெறப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 96780 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. அதேநேரம் குறைந்தளவு நெல்லுற்பத்தியாக 15817 மெற்றிக் தொன் 1997 ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது. பெரும்போகத்தில் நெல் விதைக்கப்பட்ட பரப்பையும், அறுவடை செய்யப்பட்ட பரப்பையும் ஒப்பிட்டு நோக்கும் போது சில காலப்பகுதியில் சாதகமான போக்கையும், சில காலப்பகுதியில் பாதகமான போக்கையும் காட்டுகின்றது. இந்தவகையில் 1995 / 1996 – 2005/ 2006 வரையான காலப்பகுதியில் விதைக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவு படிப்படியாக அதிகரித்துக் காணப்படுகின்றது. 2006/2007– 2008/2009 வரையான காலப்பகுதியில் குறைவடைந்தும் காணப்படுகின்றது. இதற்கு யுத்தம் மற்றும் காலநிலை என்பன காரணமாக அமைந்துள்ளன. சிறுபோகத்தில் நெல் விதைக்கப்பட்ட பரப்பையும் அறுவடை செய்யப்பட்ட பரப்பையும் நோக்கும் போது பெரும்பாலான வருடங்களில் சாதகமான நிலைமையே காணப்படுகின்றது. அதாவது விதைக்கப்பட்ட பரபப்பிற்கும் அறுவடைசெய்யப்பட்ட பரப்பிற்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படவில்லை.

## உசாத்துணைகள்

1. Deparment of census & statistic,2015, Statistical Hand Book Batticaloa District,Kachcheri,Batticaloa.


2. Department of Agriculture, 2015, Batticaloa
3. இலங்கை மத்திய வங்கி , 2011, இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, இலங்கை மத்திய வங்கி வெளியீடு, கொழும்பு

4. Sulakshika,Manawadu, (2008). ‘‘Rainfall Fluctuation and Changing Patterns of Agriculture Practices*’’*

5. அமிர்தலிங்கம்,கோ. (2008). இலங்கைப் பொருளாதாரம், பூபாலப்பிள்ளை பதிப்பகம்.


**வரைபடங்கள்**

வரைபடம் 1. மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்போக நெல் உற்பத்திபோக்கு





மூலம்: ஆய்வாளனினால் தயாரிக்கப்பட்டது.

வரைபடம் 2. மட்டக்களப்புமாவட்டத்தின் பெரும்போகநெல்லுற்பத்திபோக்கைகாட்டும் மூன்றுவருடநகரும் சராசரி





மூலம்: ஆய்வாளனினால் தயாரிக்கப்பட்டது.

வரைபடம் 3. மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்போகத்தில் ஒரு ஹெக்டெயருக்கான விளைச்சல்





மூலம்:ஆய்வாளனினால் தயாரிக்கப்பட்டது.

வரைபடம் 4 மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்போகத்தில் நெல் விதைக்கப்பட்ட அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பின் அளவு





மூலம்: ஆய்வாளனினால் தயாரிக்கப்பட்டது.

வரைபடம் 5 மட்டக்களப்பு மாவட்டத்தின் சிறுபோக நெல் உற்பத்தி போக்கு





மூலம்:ஆய்வாளனினால் தயாரிக்கப்பட்டது.

வரைபடம் 6. மட்டக்களப்புமாவட்டத்தின் சிறுபோக நெல்லுற்பத்தி போக்கை காட்டும் மூன்றுவருடநகரும் சராசரி





மூலம்:ஆய்வாளனினால்தயாரிக்கப்பட்டது.

வரைபடம் 7 மட்டக்களப்பு மாவட்டத்தின் சிறுபோகத்தில் ஒரு ஹெக்டெயருக்கான விளைச்சல்




மூலம்: ஆய்வாளனினால் தயாரிக்கப்பட்டது.

வரைபடம் 8 மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்போகத்தில் நெல் விதைக்கப்பட்ட அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பின் அளவு




மூலம்:ஆய்வாளனினால் தயாரிக்கப்பட்டது.